bl.interview

Hamsini Karthik
Mumbai

Anirban Bose, CEO, Financial Services SBU, Capgemini says Indian financial services firms have travelled a long distance in adopting technology in their operations and businesses. Indian banks spend 10 per cent of their operating expenses in technology versus 25 per cent spent by banks in the US.

> Tech is no longer a nice to have thing; it is a part of business. I am hopeful Indian investment in tech will soon be bigger than many countries
>
> ANIRBAN BOSE, CEO, Financial Services SBU, Capgemini

**Within the APAC region, how do you find India's adoption of the tech-led innovation compared to rest of the countries?**

India has recently been at the forefront in this. When you talk about digital payments like UPI, it's technologically way ahead.

What RBI is trying to do on the same day settlement or the open network digital commerce (ONDC); these are going to create more innovation between the bank and the others.

The good part is that India is a very young country and the younger generation is hungry for digital consumptions. If I compare with the overall APAC scale in various countries and various degrees of maturity, some countries have leapfrogged. The Monetary Authority of Singapore started offline retail settlement using tokens, whereas trying to do it on a mass scale and that takes time. What India has done with UPI is phenomenal.

Australia did a little bit of retail currency and China is a different story altogether.

**You work with companies across the spectrum of financial services. Which segm[ent] is more receptive to tr[y] out something new or the tech side?**

Banking is the first one to m[...] You have the techno[...] innovations like GPT, the ri[...] cloud data and API. You ca[...] take advantage of the [...] things and identify the [...] signals or the strong signa[...] do the predictive things u[...] you move your busi[...] forward.

Then you have a totally [...] asset class that is getting [...] called the crypto. Similarly [...] look at the overall insura[...] spectrum now, I'm seeing [...] more movement in the [...] and General Insurance. You [...] buy insurance much faster. [...] can file a claim and get [...] adjudication faster. We [...] working very closely in cer[...] areas where a comme[...] insurer can use our digital t[...] methodology to actually get [...] entire valuation of the asset [...] example, of this room, [...] simulate any risk and get [...] cost valuation immedia[...] before even sending [...]

# Iron ore production rises 4[...]

Press Trust of India
New Delhi

The country's iron ore production increased by four per cent to 52 million tonnes (mt) in the April-May period of the ongoing fiscal.

The country's iron ore output was at 50 mt in the corresponding period of previous fiscal, according to provisional figures.

The production of limestone increased to 79 mt in April-May period from 77 [...] in the year-ago period, [...] mines ministry said in [...] statement.

"The production of m[an]ganese ore has jumped by 1[...] per cent over correspond[ing] period previous year wit[h] production of 0.7 mt in 2024-25 (April-May)," [...] statement said.

Iron ore and limestone [to]gether account for about [...] per cent of the total min[...]

Equalisation Levy. The validity of this agreement was from April 1, 2022, till implementation of Pillar 1 or March 31, 2024, whichever is earlier. Now this has been extended for one more month

Aravind Srivatsan, Tax Leader at Nangia Andersen LLP, said the US accused India leading to an investigation by the Office of the United States Trade Representative (USTR) earlier. In response, India defended the levy, emphasising its non-discriminatory nature, prospective application, and alignment with international tax principles outlined by the OECD/G20 BEPS Project.

TATA
TATA POWER
(Corporate Contracts Department)
The Tata Power Company Limited, 2nd Floor, Sahar Receiving Station
Sahar Airport Road, Andheri East, Mumbai-400059
(Board Line: 022-67173188) CIN: L28920MH1919PLC000567

NOTICE INVITING TENDER (NIT)

The Tata Power Company Limited invites tenders from eligible vendors for the following tender package (Two Part Bidding).

RFQ for Office LTSC Standard 2021 - Perpetual (Package Ref: CC25SAS017)

For detailed NIT, please visit Tender section on website https://www.tatapower.com. Interested and eligible bidders to submit Tender Fee, Authorization Letter and Bid Documents before Friday, 19th July 2024, 15:00 Hrs

Future corrigendum's (if any), to the above tenders will be published on Tender section on website https://www.tatapower.com only.

Apollo HOSPITALS

APOLLO HOSPITALS ENTERPRISE LIMITED

CIN: L85110TN1979PLC008035
Regd. Office : No. 19, Bishop Gardens, Raja Annamalaipuram, Chennai - 600 028
Secretarial Dept : Ali Towers, III Floor, No. 55, Greams Road, Chennai – 600 006
Tel. No. 044-28290956, 28293896.
Email : investor.relations@apollohospitals.com Website : www.apollohospitals.com

Notice for Proposed Transfer of Shares to Investor Education & Protection Fund (IEPF)

The Company, as per the extant regulations, is required to transfer the unclaimed dividends for a period of seven years relating to the year 2016 – 2017 to the IEPF Authority on 20thSeptember 2024.Pursuant to Section 124 of the Companies Act, 2013 read with Rule 6 of the IEPF (Accounting, Audit, Transfer and Refund) Rules 2016. Notice is hereby given that all the related equity shares in respect of which dividend has not been claimed for seven consecutive years or more (i.e, dividend from the financial year 2016-2017 onwards up to financial year 2024-2025) shall be transferred by the Company in the name of the IEPF Authority.

As required under the provisions of the said Rules, the Company has sent a reminder on 16thFebruary 2024 & 20th May 2024 to the individual shareholders concerned to the latest available addresses, giving therein the particulars of the shares required to be transferred to the IEPF Authority and advising them to claim the dividend available with the Company on or before 15thSeptember 2024 to avoid the aforesaid transfer of the dividends and shares to the IEPF Authority. Shareholders who have not still claimed the dividend are requested to contact, either the following:

| THE COMPANY | REGISTRAR AND SHARE TRANSFER AGENT |
|---|---|
| APOLLO HOSPITALS ENTERPRISE LTD<br>Secretarial Department, Ali Towers<br>III Floor, No.55 Greams Road,<br>Chennai – 600 006,<br>Tel.No.044-2829 0956, 2829 3896<br>Email :<br>investor.relations@apollohospitals.com | M/s INTEGRATED REGISTRY MANAGEMENT SERVICES PRIVATE LTD<br>Kences Towers, 2nd Floor,<br>No.1 Ramakrishna Street,<br>North Usman Road, T.Nagar,<br>Chennai – 600 017<br>Tel. No.044-2814 0801, 2814 0803<br>Email: Einward@IntegratedIndia.in |

The details of such shareholders have been uploaded on the website of the Company www.apollohospitals.com. It may be noted that requests received after the aforesaid date will not be entertained and the Company will proceed to complete the transfer of the dividend and shares to the IEPF Authority as per the procedure laid down in the Act / Rules.

It may be noted that as per the extent regulations, the investors are permitted to claim the dividends and shares transferred to the IEPF Authority by making claim in the prescribed form. For further details, please visit the website: www.iepf.gov.in

for APOLLO HOSPITALS ENTERPRISE LIMITED
S. M. KRISHNAN
Company Secretary

Place : Chennai
Date : 28th June 2024

"உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ்

# பெரம்பலூரில் கோரிக்கை வைத்த 24 மணி நேரத்திற்குள் வீட்டுமனை பட்டா வழங்கியதால் முதலமைச்சருக்கு தங்களது நன்றிகளை தெரிவித்துக் கொண்ட பயனாளிகள்





ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்ததோடு மட்டுமல்லாமல் அதனை சீரிய முறையில் செயல்படுத்தி முதலமைச்சர்களுக்கெல்லாம் முன்னோடியாக திகழ்ந்து வருகிறார்கள் தமிழ்நாடு முதலமைச்சர். அரசின் திட்டங்கள் தொய்வில்லாமல் தொடர வேண்டும் எனவும், அரசின் திட்டங்களை அதிகாரிகள் கவனமுடன் கண்காணிக்க வேண்டும் எனவும், அரசின் திட்டங்கள் கடைக்கோடி மனிதர்களுக்கும் சென்று சேர வேண்டும் எனவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து மாவட்ட ஆட்சித்தலை வர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதனடிப்படையில், அரசின் அனைத்து நலத்திட்டங்களும், சேவைகளும் தங்கு தடை இன்றி விரைந்து மக்களைச் சென்றடைவதை உறுதி செய்திட வேண்டும் என்ற உன்னத நோக்கத்தின் அடிப்படையில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" என்ற புதிய திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்துள்ளார்கள்.

"உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்ட முகாம் சென்னை மாவட்டம் நீங்கலாக மற்ற அனைத்து மாவட்டங்களிலும் குறிப்பிட்ட வட்டத்தில் ஒவ்வொரு மாதமும் நான்காவது புதன்கிழமை அன்று மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெறும். மேலும் முகாம் நடைபெறும் வட்டம் குறித்த தகவல் மாவட்ட கலெக்டரால் முன்கூட்டியே பொது மக்களுக்கு தெரிவிக்கப்படும்.

"உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் படி, மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட அளவிலான இதர உயர் அலுவலர்கள் காலை 9 மணி முதல் மறுநாள் காலை 9 மணி வரை தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டத்தில் தங்கி பல்வேறு அரசு துறைகளின் மூலம் செயல்படு த்தப்பட்டு வரும் திட்டங்கள் சேவைகள் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து கள ஆய்வு மேற்கொள்வர். கள ஆய்வின் போது பெறப்படும் கருத்துக்களின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மேம்பட்ட சேவைகள் வழங்குதல், திட்டங்களை விரைவுப்ப டுத்துதல் தொடர்பாக உரிய தீர்வு காண்பார். மேலும் அன்றைய தினம் மாவட்ட கலெக்டர்கள் மக்களை நேரடியாக சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து மனுக்களை பெற்று அவற்றின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்வார்கள். அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் மக்களைச் சென்றடையும் வகையிலும் நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடும் வகையிலும் மாவட்ட கலெக்டர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் முழு அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட்டு வருகிறார்கள்.

மக்களை நாடி மக்கள் குறைகளை கேட்டு உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் களத்துக்கே வரும் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" என்ற திட்டத்தின் கீழ் பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் ஒன்றியம் செட்டிகுளம் ஊராட்சியில் மாவட்ட கலெக்டர் க.கற்பகம், அரசின் திட்டப் பணிகள் குறித்து ஆய்வு செய்து, பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். இலவச வீட்டுமனைப்பட்டா கேட்டு முதல் நாள் கோரிக்கைவைத்த நான்கு நபர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டாக்களுக்கான ஆணைகளை மாவட்ட கலெக்டர் வழங்கினார்.



**உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் வீட்டுமனைப்பட்டா பெற்றமுத்துசாமி என்பவர் தெரிவித்ததாவது:** எனது பெயர் முத்துசாமி. எனக்கு வீட்டு மனை பட்டா வேண்டி கடந்த இரண்டு ஆண்டுகளாக எனது சொந்த வேலைகளை எல்லாம் விட்டுவிட்டு அலைந்து வந்தேன். எந்த பயனும் இல்லை. இந்த சமயத்தில்தான் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் மாவட்ட கலெக்டர் எங்களது கிராமத்திற்கு வருகை புரிந்து 24 மணி நேரமும் தங்கி பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டு அறிய உள்ளதாக தகவல் கிடைத்தது. நான் இந்த முகாமில் எனக்கு வீட்டுமனை பட்டா வேண்டி மனு கொடுத்திருந்தேன். வழக்கம் போல இந்த மனுவிற்கும் எந்த பதிலும் இருக்காது இந்த முறையும் வீட்டுமனை பட்டா கிடைக்காது என்று தான் நம்பிக்கை இல்லாமல் இருந்தேன். ஆனால் 24 மணி நேரத்தில் எனது மனு பரிசீலனை செய்யப்பட்டு அடுத்த நாள் எனக்கு வீட்டுமனை பட்டாவினை மாவட்ட கலெக்டர் வழங்கினார்கள். இதனால் நான் பெரும் மகிழ்ச்சியில் உள்ளேன். இதுபோன்ற ஒரு மகத்தான திட்டத்தை உருவாக்கித் தந்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு எங்களது கிராம மக்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

திருப்பத்தூர் தேர்வு நிலை பேரூராட்சி பகுதிகளில்

# ரூ.26.85 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சித் திட்ட பணிகள்: கலெக்டர் ஆஷா அஜித் நேரில் பார்வையிட்டு ஆய்வு



சிவகங்கை, ஜூன்.29–

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து, மாவட்ட கலெக்டர் ஆஷா அஜித், ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து, சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், மக்கள் நலத்திட்டங்கள் மட்டுமன்றி பொதுமக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் மேம்படுத்திடும் பொருட்டு, அனைத்து பகுதிகளிலும் வளர்ச்சி பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்தவகையில், சிவகங்கை மாவட்டம் முழுவதும் பொதுமக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதில், திருப்பத்தூர் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2023–2024 ஆம் நிதியாண்டின் கீழ் பல்வேறு திட்டங்களின் கீழ் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2023–24ன் கீழ் ரூ.03.90 கோடி மதிப்பீட்டில் கணேஷ் நகர், அச்சுக்கட்டு தெரு மற்றும் நாகப்பா நகர் ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணியும், அம்ருத் 2.0 202324ன் கீழ் ரூ.21.67 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகளும், தூய்மை இந்தியா 2.0 202324ன் கீழ் ரூ.43.25 இலட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் ஊர்தி கொள்முதல் செய்திடவும், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் அபிவிருத்தி திட்டம் 2023–24ன் கீழ் வார்டு எண்:15ல் ரூ.05.50 லட்சம் மதிப்பீட்டில் குளியல் தொட்டி, புதிய போர்வெல் அமைத்து மின் இணைப்பு வழங்குதல் பணியும் மற்றும் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் வகுப்பறை, அலுவலக அறைகள் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளும் மற்றும் ஆறாவது நிதிக்குழு மானியத்திட்டம் 2023–24ன் கீழ் ரூ.61.00 லட்சம் மதிப்பீட்டில் தெம்மாபட்டு அரசு உயர்நிலைப்பள்ளியிலுள்ள வகுப்பறை, கழிவறை, அலுவலக அறைகளில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள், சுற்றுச்சுவர் அமைக்கும் பணி என மொத்தம் ரூ. 26.85 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்டவாறு நடைபெற்று வரும் பணிகளில் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், திருப்பத்தூர் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து தரமான முறையில் முடித்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட கலெக்டர் ஆஷா அஜித், தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, திருப்பத்தூர் பேரூராட்சி தலைவர் கோகிலாராணி, பேரூராட்சி செயல் அலுவலர் தனுஷ்கோடி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# சமயபுரம் மாரியம்மன் கோவில் உண்டியல் திறப்பு: ரூ.78 லட்சம், 2.75 கிலோ தங்கம் காணிக்கை



துறையூர், ஜூன். 29–

தமிழகத்தின் பிரசித்தி பெற்ற சக்தி தலங்களில் ஒன்றான சமயபுரம் மாரியம்மன் கோவிலில் வெளிநாடு மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து திரளான பக்தர்கள் கோவிலுக்கு வந்து தங்களது நேர்த்திக் கடனாக காணிக்கைகளை செலுத்துவது வழக்கம். அவ்வாறு பக்தர்கள் செலுத்தும் காணிக்கைகள் கோவில் நிர்வாகம் சார்பில் மாதம் 3 முறை எண்ணப்படுவது வழக்கம். அதன்படி இந்த மாதம் இரண்டாவது முறையாக நேற்று சமயபுரம் மாரியம்மன் கோவில் அறங்காவலர் குழு தலைவர் வி எஸ் பி இளங்கோவன் கோவில் இணை ஆணையர் கல்யாணி, அறங்காவலர் குழு உறுப்பினர்கள் பிச்சைமணி, ராஜ சுகந்தி, லட்சுமணன், இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர்கள் லட்சுமணன், அனிதா, ஆய்வாளர் விஜயபூபதி, திருக்கோவில் கண்காணிப்பாளர்கள் மற்றும் செயல் அலுவலர்கள் முன்னிலையில் உண்டியல்களை திறந்து காணிக்கைகள் எண்ணப்பட்டன. இதில் பக்தர்கள் அளித்த காணிக்கையாக ரூபாய் 78 லட்சத்து 89 ஆயிரத்து 648 ரொக்கமும், 2 கிலோ 75 கிராம் தங்கமும், 3 கிலோ 210 கிராம் வெள்ளியும், 140 வெளிநாட்டு கரன்சிபணம் மற்றும் 854 வெளிநாட்டு நாணயங்களும் கிடைத்துள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. உண்டியல் காணிக்கை எண்ணும் பணியில் திருக்கோவில் பணியாளர்கள் மற்றும் ஊழியர்கள் ஈடுபட்டனர்.

# ஸ்ரீவில்லிபுத்தூர் லயன்ஸ் பள்ளியில் போதைப் பொருள் விழிப்புணர்வு சைக்கிள் பேரணி



ஸ்ரீவில்லிபுத்தூர், ஜூன்.29–

ஸ்ரீ வில்லிபுத்தூர் லயன்ஸ் பதின்ம மேல்நிலைப் பள்ளியில் சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு சைக்கிள் பேரணி நடைபெற்றது. முதல்வர் எம்.சுந்தரமகாலிங்கம் தலைமை வகித்தார். மதுவிலக்கு அமலாக்க பிரிவு டிஎஸ்பி ரவீந்திர பிரகாஷ் பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார். மாணவர்களின் விழிப்புணர்வு பேரணி நகரின் முக்கிய பகுதிகள் வழியாக சென்று மீண்டும் பள்ளியில் நிறைவடைந்தது. பேரணியில் பள்ளித் தாளாளர் ஆர். வெங்கடாசலபதி, நிர்வாகக் குழு உறுப்பினர்கள் குணசேகரன், ஸ்ரீ ரெங்கராஜா, முகமது மொகைதீன், ஆறுமுகம், சிவகுருநாதன், காவல் ஆய்வாளர் சங்கர்கண்ணன் மற்றும் போலீஸார் கலந்து கொண்டனர். அனைவரும் போதைப் பொருள்களை ஒழித்து நாட்டைக் காப்போம் என்று உறுதி எடுக்கப்பட்டது.

# உத்தமபாளையம் ஜமாபந்தி: பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார் கலெக்டர் சஜீவனா



தேனி, ஜூன்.29–

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டாட்சியர் அலுவலகத்தில் உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட பூலானந்தபுரம், சின்னமனூர், கருங்காட்டான்குளம், முத்துலாபுரம், சின்னஓவுலாபுரம் ஆகிய வருவாய் கிராமங்களுக்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) மாவட்ட கலெக்டர் ஆர்.வி.ஷஜீவனா, தலைமையில் நடைப்பெற்றது.

தேனி மாவட்டத்திலுள்ள உத்தமபாளையம், பெரியகுளம், தேனி, ஆண்டிபட்டி, மற்றும் போடிநாயக்கனூர் ஆகிய ஐந்து வட்டங்களில் வட்டாட்சியர் அலுவலகங்களிலும் 27.06.2024 முதல் 05.07.2024 வரை (29.06.2024, 30.06.2024 மற்றும் 01.07.2024) ஆகிய நாட்கள் நீங்கலாக 1433 ஆம் பசலி ஆண்டிற்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நடத்த திட்டமிடப்பட்டது.

அதன்படி, இன்றைய தினம் உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட பூலானந்தபுரம், சின்னமனூர், கருங்காட்டான்குளம், முத்துலாபுரம், சின்னஓவுலாபுரம் கிராமங்களுக்கு ஆகிய வருவாய் கிராமங்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையிலும், பெரியகுளம் வட்டத்தில் கெங்குவார்பட்டி பகுதி1, பகுதி 2, தேவதானப்பட்டி பகுதி 1, பகுதி2, தே.வாடிப்பட்டி, சில்வார்பட்டி கிராமங்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ஜெயபாரதி தலைமையிலும், தேனி வட்டத்தில் ஊஞ்சாம்பட்டி, அல்லிநகரம், வீரபாண்டி, உப்பார்பட்டி ஆகிய கிராமங்களுக்கு தேனி உதவி ஆணையர் (கலால்) ரவிச்சந்திரன் அவர்கள் தலைமையிலும், ஆண்டிபட்டி வட்டத்தில், கோவில்பட்டி, சண்முகசுந்தரபுரம், ஆண்டிபட்டி பகுதி1, பகுதி2 கிராமங்களுக்கு பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் முத்துமாதவன் தலைமையிலும், போடிநாயக்கனூர் வட்டத்தில் இராசிங்காபுரம், சிலமலை, போ.அம்மாபட்டி கிராமங்களுக்கு உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் தாட்சாயினி தலைமையில் நடைபெற்றது.

வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) ல் பொதுமக்களிடமிருந்து பட்டா மாறுதல், வீட்டுமனைப் பட்டாக்கள், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், பிறப்புஇறப்புச் சான்றிதழ், சாதிச்சான்றிதழ், இருப்பிடச்சான்றிதழ், வருமானச் சான்றிதழ், குடும்ப அட்டை, மாதாந்திர உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, இயற்கை மரணம், விபத்து நிவாரணத்தொகை, நலிந்தோர் உதவித்தொகை, நிலம், உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக உத்தமபாளையம் வட்டத்தில்83, பெரியகுளம் வட்டத்தில்139, தேனி வட்டத்தில்394, போடிநாயக்கனூர் வட்டத்தில் ஆண்டிபட்டி வட்டத்தில் 375 என மொத்தம் 1208 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. வருவாய் தீர்வாயத்தில் (ஜமாபந்தி) பெறப்படும் மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, தகுதி வாய்ந்த மனுக்களுக்கு உடனடி தீர்வு வழங்கிட மாவட்ட கலெக்டர் துறை சார்ந்த அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இந்நிகழ்வில் உதவி இயக்குநர் (நில அளவை) ப.அப்பாஸ், மாவட்ட கலெக்டரக அலுவலக பொது மேலாளர் ஜஸ்டின் சாந்தப்பா, வட்டாட்சியர் சுந்தர்லால், அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# அலங்காநல்லூர் அருகே கஞ்சா விற்ற 3 பேர் ஆயுதங்களுடன் கைது

அலங்காநல்லூர், ஜூன். 29–

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே கல்லணை பகுதியில் சார்பு ஆய்வாளர் கமலமுத்து மற்றும் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்பொழுது தண்ணீர் தொட்டி அருகே இருசக்கர வாகனத்தில் சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்த 3 நபர்களை போலீசார் விசாரணை செய்ததில் அவர்கள் முன்னுக்குப் பின் முரணாக பதில் அளித்துள்ளனர். சந்தேகமடைந்த போலீசார் அவர்களை காவல் நிலையம் அழைத்து வந்து விசாரணை செய்ததில் மதுரை மாப்பாளையம் பகுதியைச் சேர்ந்த பிரகாஷ் (36), குமாரம் பகுதியைச் சேர்ந்த விவேக் (26),தத்தனேரி மேல கைலாசபுரம் பகுதியைச் சேர்ந்த செல்லப்பாண்டி (44). என்பதும் இவர்கள் அலங்காநல்லூர் காவல் நிலையத்திற்குட்பட்ட குமாரம் பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டது தெரிய வந்தது. இதன் அடிப்படையில் 3 பேரையும் கைது செய்த போலீசார் அவர்களிடமிருந்து 3 கிலோ 800 கிராம் கஞ்சா மற்றும் இருசக்கர வாகனம், கத்தி உள்ளிட்ட ஆயுதங்களை பறிமுதல் செய்தனர்.




ஏஏஏ பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி சார்பாக "ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான கல்வி நிறுவனங்களுக்கான நிதி வாய்ப்புகள்" என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைப்பெற்றது. இந்த கருத்தரங்கிற்கு, பெங்களூரு டிஆர்டிஓ–வில் இருந்து டி.ராம் பிரபு தலைமை விருந்தினராக கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் எம்.சேகர் தலைமை வகித்தார். ஐஐசி தலைவர் ஜி.வைரமுத்து வாழ்த்துரை வழங்கினார். இதை தொடர்ந்து கல்லூரி முதல்வர் தனது உரையில், ஏஏஏ கல்லூரி ஆராய்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருவதாகவும், இதன் மூலம் இதுபோன்ற பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வருவதாகவும் கூறினார். தலைமையில் விருத்தினரான டி.ராம் பிரபு பல்வேறு துறைகளுக்கு கிடைக்கக்கூடிய பல ஆராய்ச்சி நிதி வாய்ப்புகளை பகிர்ந்து கொண்டார். குறிப்பாக பேராசிரியைகளுக்கு கிடைக்கும் நிதி வாய்ப்பு திட்டங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். இக்கருத்தரங்கில் பல்வேறு துறை பேராசிரியர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். பேராசிரியை எஸ்.சுகன்யா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அனைவருக்கும் நன்றி கூறினார்.




# குரும்பூரில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி, கருத்தரங்கு

திருச்செந்தூர், ஜூன்.29–

குரும்பூரில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி மற்றும் கருத்தரங்கு நடந்தது.குரும்பூர் காவல் நிலையம் மற்றும் பணிக்கநாடார்குடியிருப்பு ஸ்ரீ கணேசர் மேல்நிலைப்பள்ளி சார்பில் குரும்பூரில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி மற்றும் கருத்தரங்கம் நடந்தது. குரும்பூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் (பொ) ஸ்டெல்லாபாய் கொடியசைத்து பேரணியை தொடங்கி வைத்தார். சப் இன்ஸ்பெக்டர் சுப்பிரமணியன் முன்னிலை வகித்தார். தேசிய மாணவர் படை அலுவலர் ராஜகுமார் வரவேற்றார். பள்ளி முன்பு துவங்கிய பேரணி குரும்பூர் பஜார் வரை சென்றது. பேரணியில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகள் போதை ஒழிப்பு கோஷங்களை எழுப்பியவாறு சென்றனர். இதனைத்தொடர்ந்து பள்ளியில் மது ஒழிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது. துணை தலைமையாசிரியர் ஜேசுதாசன் நன்றி கூறினார். பேரணியில் கலந்து கொண்ட என்.சி.சி. மாணவ மாணவிகளையும், என்.என்.எஸ்., மாணவர்களையும் பள்ளி செயலாளர் செல்வம், தலைவர் பிரபாகரன், பொருளாளர் விஜயசேகர் ஆகியோர் பாராட்டினர்.

Apollo HOSPITALS

## APOLLO HOSPITALS ENTERPRISE LIMITED

CIN: L85110TN1979PLC008035
Regd. Office : No. 19, Bishop Gardens, Raja Annamalaipuram, Chennai - 600 028
Secretarial Dept : Ali Towers, III Floor, No. 55, Greams Road, Chennai – 600 006
Tel. No. 044-28290956, 28293896.
Email : investor.relations@apollohospitals.com Website : www.apollohospitals.com

**Notice for Proposed Transfer of Shares to Investor Education & Protection Fund (IEPF)**

The Company, as per the extant regulations, is required to transfer the unclaimed dividends for a period of seven years relating to the year 2016 – 2017 to the IEPF Authority on 20thSeptember 2024.Pursuant to Section 124 of the Companies Act, 2013 read with Rule 6 of the IEPF (Accounting, Audit, Transfer and Refund) Rules 2016. Notice is hereby given that all the related equity shares in respect of which dividend has not been claimed for seven consecutive years or more (i.e, dividend from the financial year 2016-2017 onwards up to financial year 2024-2025) shall be transferred by the Company in the name of the IEPF Authority.

As required under the provisions of the said Rules, the Company has sent a reminder on 16thFebruary 2024 & 20th May 2024 to the individual shareholders concerned to the latest available addresses, giving therein the particulars of the shares required to be transferred to the IEPF Authority and advising them to claim the dividend available with the Company on or before 15thSeptember 2024 to avoid the aforesaid transfer of the dividends and shares to the IEPF Authority. Shareholders who have not still claimed the dividend are requested to contact, either the following:

| THE COMPANY | REGISTRAR AND SHARE TRANSFER AGENT |
|---|---|
| **APOLLO HOSPITALS ENTERPRISE LTD**<br>Secretarial Department, Ali Towers<br>III Floor, No.55 Greams Road,<br>Chennai – 600 006,<br>Tel.No.044-2829 0956, 2829 3896<br>Email :<br>investor.relations@apollohospitals.com | **M/s INTEGRATED REGISTRY MANAGEMENT SERVICES PRIVATE LTD**<br>Kences Towers, 2nd Floor,<br>No.1 Ramakrishna Street,<br>North Usman Road, T.Nagar,<br>Chennai – 600 017 ,<br>Tel. No.044-2814 0801, 2814 0803<br>Email: Einward@IntegratedIndia.in |

The details of such shareholders have been uploaded on the website of the Company www.apollohospitals.com. It may be noted that requests received after the aforesaid date will not be entertained and the Company will proceed to complete the transfer of the dividend and shares to the IEPF Authority as per the procedure laid down in the Act / Rules.

It may be noted that as per the extent regulations, the investors are permitted to claim the dividends and shares transferred to the IEPF Authority by making claim in the prescribed form. For further details, please visit the website:www.iepf.gov.in

for **APOLLO HOSPITALS ENTERPRISE LIMITED**
**S. M. KRISHNAN**
Company Secretary

Place : **Chennai**
Date : **28th June 2024**